**டிஎன்பிஎல் சார்பில் கால்நடை மருத்துவ முகாம்**

First Published : 02 Apr 2010 12:54:30 AM IST

கரூர், ஏப். 1: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் கரூர் ஆலமரத்துப்பட்டியில் இலவச கால்நடை மருத்துவ முகாம் அண்மையில் நடைபெற்றது.

டி.என்.பி.எல்., தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்புத் துறை, கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் இந்த முகாம் நடைபெற்றது.

முகாமில் 109 கால்நடைகளுக்கு ஊட்டச்சத்து மாவு வழங்கப்பட்டது. முகாமை திருக்காடுதுறை ஊராட்சித் தலைவர் சுப்புலட்சுமி முன்னிலையில், காகித நிறுவன மனித வளத் துறை பொது மேலாளர் த. பிரான்சிஸ் டிவோட்டா, உதவிப் பொது மேலாளர் சு. ராமமூர்த்தி ஆகியோர் தொடக்கிவைத்தனர்.

கால்நடை பராமரிப்புத் துறையைச் சேர்ந்த அனிதா, சேகர், ஆராய்ச்சி மைய இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர் க. செந்தில்வேல், கால்நடை நோய் புலனாய்வுத் துறை உதவி இயக்குநர் ப. சக்திவேல் அடங்கிய குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்தனர்.

**பவானிசாகர் நீர்மட்டம் 74.08 அடி**

First Published : 02 Apr 2010 05:49:10 AM IST

ஈரோடு, ஏப்.1: பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை 74.08 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 389 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. பாசன வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. ஆற்றில் விநாடிக்கு 600 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையி0ன் நீர் இருப்பு 12 டிஎம்சி.

**தேயிலை ஏல மையத்தில் தேக்க நிலை: பசுந்தேயிலை விலை குறித்து அச்சம்**

First Published : 02 Apr 2010 05:53:14 AM IST

உதகை, ஏப்.1: குன்னூர் தேயிலை ஏல மையத்தில் தொடர்ந்து தேக்க நிலை நீடிப்பதால் நீலகிரி மாவட்டத்தில் பசுந்தேயிலையின் விலையைக் குறித்த அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஏலத்திற்கு கொண்டு வரப்படும் தேயிலைத்தூள் முழுமையாக விற்பனையாகாமல் தேங்குவதால் பசுந்தேயிலையின் விலையிலும் வீழ்ச்சி ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

நீலகிரியில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைத்தூள் வாரந்தோறும் குன்னூர் தேயிலை ஏல மையத்தின் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. ஆனால், கடந்த சில வாரங்களாக குன்னூர் தேயிலை ஏலத்தில் பெரும்பகுதி தேயிலைத்தூள் தேக்கமடைகிறது. விற்பனைக்கு வரும் தேயிலைத்தூளில் வாரந்தோறும் 30 முதல் 40 சதம் தேக்கமடைவதால் தேயிலை வர்த்தகர்கள் பெரும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

கடந்த வாரம் நடைபெற்ற தேயிலை ஏலத்தில் மொத்தம் 14.78 லட்சம் கிலோ தேயிலைத்தூள் விற்பனைக்கு வந்தது. இதில் 40 சத தேயிலைத்தூள் விற்பனையாகாமல் தேங்கியது. அனைத்து ரக தேயிலைத்தூளின் விலைகளையும் ஒப்பிட்டு பார்க்கையில் கிலோவுக்கு ரூ.3 வரை சரிவு ஏற்பட்டது. சிடிசி ரகத்தில் அதிகபட்ச விலையாக கிலோவுக்கு ரூ.150,ஆர்த்தோடக்ஸ் ரகத்தில் கிலோவுக்கு ரூ.160 மட்டுமே கிடைத்தது.

விலை நிலவரத்தைப் பொறுத்தமட்டில் இலை ரகத்தில் சாதாரண ரக தேயிலைத் தூளின் விலை கிலோவுக்கு ரூ.50 முதல் ரூ.53 வரையிலும், சிறந்த ரக தேயிலைத் தூளின் விலை கிலோவுக்கு ரூ.90-லிருந்து ரூ.108 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்தின் விலை ரூ.53 முதல் ரூ.56 வரையிலும், சிறந்த ரக தூளின் விலை ரூ.90-லிருந்து ரூ.120 வரையிலும் இருந்தது. தரமான தேயிலைத்தூளுக்கு வர்த்தகர்கள் மத்தியில் நல்ல கிராக்கி இருந்தது. ஆனால் சாதாரண மற்றும் நடுத்தர வகை தேயிலைத்தூள்கள் வர்த்தகர்களால் புறக்கணிக்கப்பட்டன.

பொதுவாக நவம்பர் முதல் ஏப்ரல் வரையிலான காலத்தில் வட மாநிலங்களில் வறட்சி ஏற்படுமென்பதால் தேயிலை உற்பத்தி குறையும். இதனால் நீலகிரி தேயிலைக்கு கிராக்கியும் அதிகரிக்கும். ஆனால், நடப்பாண்டில் கடந்த 2 மாதங்களாகவே குன்னூர் தேயிலை ஏல மையத்தில் நீலகிரி தேயிலை முழுமையாக விற்பனையாகாமல் தேங்குகிறது. இதனால் தேயிலை வர்த்தகர்கள் மற்றும் சிறு விவசாயிகள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளதோடு அச்சமும் ஏற்பட்டுள்ளது.

தேயிலை ஏலத்தில் உற்பத்தி செய்யப்பட்ட தேயிலைக்கு கிடைக்கும் விலையை வைத்தே பசுந்தேயிலையின் விலையும் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு கிலோ தேயிலைத்தூள் தயாரிக்க 5 கிலோ பசுந்தேயிலை தேவைப்படும். அதனால் தேயிலைத்தூளுக்கு கிடைக்கும் விலையை 6 ஆக பிரித்து அதில் ஒரு பகுதியையே பசுந்தேயிலைக்கான விலையாக நிர்ணயிப்பர். தற்போது தேயிலைத்தூளின் விலையில் மந்த நிலையே நிலவுவதால் இதன் பாதிப்பு பசுந்தேயிலையின் விலையிலும் ஏற்படக் கூடுமெனக் கருதப்படுகிறது.

இதுகுறித்து தேயிலை வாரிய செயல் இயக்குநர் ஆர்.டி.நசீம் கூறுகையில், கடந்த காலங்களில் கென்யா மற்றும் இலங்கையில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக தேயிலை உற்பத்தி குறைந்தது. இதனால் வெளிநாட்டு வர்த்தகர்களின் கவனம் நீலகிரி தேயிலைத்தூளின் பக்கம் திரும்பியது. ஆனால் தற்போது கென்யாவில் தேயிலைத் தொழில் வழக்கமான பரபரப்புக்கு வந்துள்ளதோடு, இலங்கையிலும் இயல்பு நிலை திரும்பியுள்ளது. எனவே, வழக்கம்போல ஏற்றுமதி வர்த்தகர்களின் கவனம் இவ்விரு நாடுகளின் தேயிலைத்தூள் மீது திரும்பியுள்ளது.

இதன் காரணமாகத்தான் நீலகிரி தேயிலைத் தூளுக்கு கடந்த சில மாதங்களாக கிராக்கி குறைந்துள்ளது. தேயிலை ஏலத்தில் பெருமளவு தேயிலைத்தூளும் தேக்கமடைகிறது. சாதாரண மற்றும் நடுத்தர தேயிலைத்தூள் தேக்கமடைந்தாலும், தரமான தேயிலைத்தூளுக்கு வர்த்தகர்கள் மத்தியில் தொடர்ந்து கிராக்கி நிலவுவதால் தரம் மட்டுமே விலையை நிர்ணயிக்கும் என்பது மீண்டும் உறுதிபடுத்தப் பட்டுள்ளதாகவும் ஆர்.டி.நசீம் தெரிவித்தார்.

**புதுகை விவசாயிகள் தேனிக்கு கற்றறிவுப் பயணம்**

First Published : 02 Apr 2010 12:56:39 AM IST

புதுக்கோட்டை, ஏப். 1: புதுக்கோட்டை வட்டார விவசாயிகள் கற்றறிவுப் பயணமாக தேனி மாவட்டத்துக்கு அண்மையில் சென்று வந்துள்ளனர்.

நீர்வள, நிலவளத் திட்டம் மற்றும் அதன் செயலாக்கம் குறித்து அறிந்துகொள்ளும் வகையில், புதுக்கோட்டை வட்டார விவசாயிகள் ஒரு நாள் கற்றறிவுப் பயணமாக தேனி மாவட்டத்துக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

புதுக்கோட்டை தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் பி. ராஜுவின் வழிகாட்டுதலில், தோட்டக்கலை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன், துணை அலுவலர் மு. கணேசன், உதவித்தோட்டக்கலை அலுவலர்கள் இ. மகாலிங்கம், ஆர் செல்வம், துரை, அருளானந்தம் ஆகியோர் ஏற்பாட்டில் இந்த கற்றறிவுப்பயணம் நடைபெற்றது.

இப்பயணத்தின் முதல்கட்டமாக தேனி மாவட்டம்,பெரியகுளம் வட்டாரத்தில் பூவலஞ்சேரி கிராமத்தில் வறட்டாறு - நாகலாறு உப வடிப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் சீனிவாசன், தனம்மாள் ஆகியோரது வயல்களில் அமைக்கப்பட்டிருந்த சொட்டு நீர் பாசன அமைப்பை விவசாயிகள் பார்வையிட்டனர். அங்கு அவர்கள் பயிரிட்டிருந்த திசு வாழையைப் பார்வையிட்ட பின்னர், மீனாட்சிபுரம் கிராமத்தில் விவசாயி காளிராஜ் தோட்டத்தில் பயிரிட்டுள்ள தக்காளி, வெண்டை தோட்டத்தைப் பார்வையிட்டனர். தொடர்ந்து, பெரியகுளம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில்

உள்ள பல வகையான பழ மரங்களின் ரகங்கள், புளி மற்றும் பலா ரகங்களில் ஒட்டு ரகம் பதியன் அமைக்கும் முறை, தொழில்நுட்பங்கள், பழ மர கரங்களின் இயல்புகள் குறித்து விவசாயிகள் அறிந்துகொண்டனர்.

அரசு தோட்டக்கலைப் பண்ணை மேலாளர் நாகதேவன், பெரியகுளம் தோட்டக்கலை உதவி இயக்குநர் முத்தையா, உதவி வேளாண் அலுவலர் திருமேனி ஆகியோர் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர்.

**கோடைப் பட்டத்தில் பாசிப்பயறு விதைப்பு: வேளாண் துறை வலியுறுத்தல்**

First Published : 02 Apr 2010 05:52:34 AM IST

திருச்செஙகோடு, ஏப்.1: கோடைப் பட்டத்தில் பாசிப்பயறு விதைப்பு செய்து விவசாயிகள் பயன் பெறலாம் என்று வெளாண்துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து பள்ளிப்பாளையம் வேளாண் உதவி இயக்குனர் முரளீதரன் கூறியது:-

பள்ளிப்பாளையம் வட்டாரத்தில் தோட்டக்கால் பாசன பகுதியில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் குறைந்து காணப்படுகிறது. நீர்வசதி குறைவாகவுள்ள பகுதிகளில் மாற்றுப் பயிராக பாசிப்பயறு சாகுபடி செய்யலாம்.

தற்போதுள்ள கோடைப் பட்டம் பயறுவகை பயிர் சாகுபடி செய்திட ஏற்ற பருவமாகும். குறைந்த பாசன வசதியுள்ள பகுதிகளில் பாசிப்பயறு விதைப்பு செயதால் கூடுதல் மகசூலும், லாபமும் பெறலாம். இதற்கு குறைந்த வயதுடைய அதிக விளைச்சல் திறனுள்ள கே 851, வம்பன் 2 ரகங்களைப் பயன்படுத்தலாம். இவை 60 முதல் 65 நாட்கள் வயதுடையவை. ஒரு ஏக்கருக்கு 8 கிலோ விதை போதுமானது. பாசிப்பயறு விதைகளை எதிர் பூசண மருந்து டிரைக்கோடர்மா விரிடி 4 கிராம் என்ற அளவில் ஒரு கிலோ பயறு விதைக்கு கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கலாம். இதனால் வேரழுகல் நோய் போன்றவை வராது.

பயறு விளைச்சலை அதிகரித்திட உயிர் உரங்களான ரைசோபியம், பாஸ்போபேக்டீரியா, போன்ற நுண்ணுயிரினை விதைகளுடன் கலந்து விதைப்பு செயயலாம். விதைப்பு செய்த 25-ம் நாளிலும், 35-ம் நாளிலும்- பூக்கும் பருவத்தில் 2சத டிஏபி உரக்கரைசலை இலைவழி தெளிப்பு செய்வது சிறந்தது.

கோடைப்பட்டத்தில் பயறு சாகுபடி சிறப்பு முகாமினை பள்ளிப்பாளையம் வேளாண்மை விரிவாக மையம் மேற்கொண்டுள்ளது. விவசாயிகளுக்குத் தேவைப்படும் வம்பன் 2 ரக சான்று பெற்ற விதைகள் தற்போது பள்ளிபாளையம் வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைத்து விநியோகிக்கப்படுகிறது. பாசிப்பயறு சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து மேல்விவரங்கள் தேவைப்படின் சம்பந்தப்பட்ட உதவி வேளாண் அலுவலரை அணுகிப் பெறலாம் என்றார் முரளீதரன்.

**வேளாண் திட்டப் பணிகள்: கூடுதல் இயக்குநர் ஆய்வு**

First Published : 02 Apr 2010 02:42:44 AM IST

சிவகங்கை,ஏப்.1: சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்று வரும் வேளாண் திட்டப் பணிகளை வேளாண் துறை கூடுதல் இயக்குநர் (பணி மேலாண்மை) சோ.மதுமதி ஆய்வு செய்தார்.

படமாத்தூர், சாக்கோட்டை, புதுவயல் ஆகிய பகுதிகளுக்கு நேரில் சென்று வேளாண் திட்டத்தில் நடைபெறும் பணிகளை அவர் பார்வையிட்டார். படமாத்தூரில் கரும்பு சாகுபடியில் குழி நடவு முறையில் அதிக பயிர் எண்ணிக்கை பராமரிப்பு பற்றிய செயல்விளக்கத் திடலையும், கரும்புப் பயிருக்கான சொட்டு நீர் பாசன முறை, எந்திரம் மூலம் நடைபெறும் சாகுபடிப் பணி, எந்திரம் மூலம் கரும்பு அறுவடை செய்தல் ஆகிய பணிகளை அவர் பார்வையிட்டார்.

பின்னர் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகச் செயல்பாடுகள் பற்றி முழுமையாக ஆய்வு செய்தார்.
சாக்கோட்டை வட்டாரத்தில் தேசிய வேளாண் திட்டத்தில் அப்துல் ரஹீம் அமைத்துள்ள பயறு

செயல்விளக்கத்திடலையும், சித்திரை ஹானா அமைத்துள்ள மண்புழு உரம் தயாரிக்கும் கூடத்தையும் தேசிய வேளாண் வளர்ச்சித்திட்டத்தில் ரூ.3 லட்சம் மானியத்தில் புதுவயல் கிராமத்தில் சுப்பிரமணியன் அமைத்துள்ள தனியார் விதை சுத்திகரிப்பு நிலையத்தையும் அவர் ஆய்வு செய்தார்.

சிவகங்கை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் ரவிகுலசேகரபாண்டியன், வேளாண் துணை இயக்குநர் பழனிச்சாமி, ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) வெள்ளைச்சாமி, வேளாண் அலுவலர் தனபாலன், நடராஜன்,முருகபாரதி, வேளாண் உதவி இயக்குநர்கள் கண்ணன் (சாக்கோட்டை),முத்து எழில் ( திருப்பத்தூர்) ஆகியோர் உடனிருந்தனர்.

தினமலர்

**மணிலா சாகுபடியில் மகசூல் அதிகரிக்க 'டிப்ஸ்'**

ஜெயங்கொண்டம்:மணிலா சாகுபடியில் மகசூல் அதிகரிக்க ஒருங்கிணைந்த பூச்சி, நோய் நிர்வாக முறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என ஜெயங்கொண்டம் வேளாண் உதவி இயக்குனர் பழனிசாமி விவசாயிகளை கேட்டுக்கொண்டுள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:ஜெயங்கொண்டம் மற்றும் சுற்றியுள்ள தத்தனூர், கல்லாத்தூர், தண்டலை, பாப்பாகுடி, படநிலை, குண்டவெளி, மேலணிக்குழி உள்ளிட்ட கிராமங்களில் இறவை நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டு பூக்கும் பருவத்தில் உள்ளது. இத்தருணத்தில் இரண்டாம் களையெடுத்து, 80 கிலோ ஜிப்சம் இட்டு, மண் அணைக்கவும். இலை வழி உரமாக ஊட்டச்சத்து தெளிப்பதால் திரட்சியான நிலக்கடலை கிடைக்கும். விதைத்த 25ம் நாள் ஒரு முறையும், 35ம் நாள் ஒரு முறையும் ஊட்டச்சத்து கரைசல் தயார் செய்து தெளிக்கவும்.

ஏக்கருக்கு டிஏபி ஒரு கிலோ, அமோனியம் சல்பேட் 400 கிராம், போரிக் அமிலம் 200 கிராம் ஆகிய மூன்றையும் 15 லிட்டர் சுத்தமான தண்ணீரில் முதல் நாளே ஊற வைக்கவும். மறு நாள் வடிகட்டி 13 லிட்டர் கரைசலாக்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறு தயாரிக்கப்பட்ட கரைசலை ஒவ்வொரு கைத்தெளிப்பான் டேங்கிற்கும் 1 லிட்டர் ஊட்டச்சத்துக் கரைசலை 12 மிலி பிளானாடிக்ஸ் கலந்து தெளிக்கவும். ஒரு ஏக்கருக்கு 200 லிட்டர் தண்ணீர் தேவைப்படும். கடலைப் பயிருக்கு ஊட்டச்சத்துக்களும், ஜிப்சமும் ஜெயங்கொண்டம் விரிவாக்க மையத்தில் வழங்கப்படுகிறது.மேலும் கடலையில் பொதுவாக காய்த்துளைப்பான், புரோடினியா புழு, தத்துப் பூச்சிகள், சுருள் பூச்சிகள் ஆகிய பூச்சிகளின் தாக்குதலும் துரு நோய், டிக்கா இலைப்புள்ளி, வேர் அழுகல் ஆகிய நோய்களின் தாக்குதலும் காணப்படும். எனவே, ஒருங்கிணைந்த பூச்சி, நோய் நிர்வாக முறைகளை கடைப்பிடித்து பூச்சி நோய்களை கட்டுப்படுத்த வேண்டும்.

புரோடீனியா புழு இரவு நேரத்தில் கூட்டமாக செடியிலுள்ள இலை முழுவதும் உண்ணும். தண்டு மட்டுமே நிற்கும். இதைக் கட்டுப்படுத்த கோடை உழவு செய்யவும், விளக்கு பொறி ஏக்கருக்கு இரண்டு வைக்கவும், என்.பி.வி.-250 எல்இ என்ற அளவில் 10 சத வெல்லம் சேர்த்து தெளிக்கவும்.வளர்ந்த புழுக்களை கட்டுப்படுத்த குளோர்பைரிபாஸ் ஏக்கருக்கு 800 மிலி அல்லது டைகுளோர்வாஸ் 300 மிலியை 300 லிட்டர் நீருடனோ அல்லது மீத்தோமைல் 1.5 கிராம் / லிட்டர் தண்ணீருக்கு கலந்து மாலையில் தெளித்து கட்டுப்படுத்தவும்.துருநோய் மற்றும் இலைப்புள்ளி நோய்களைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு மான்கோசெப் 400 கிராம் அல்லது குளோரோதலானில் 400 கிராம் இவற்றில் ஏதேனும் ஒன்றை தெளிக்கவும். மேற்கண்ட தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்து அதிக மகசூல் பெறலாம். தற்போது மானிய

விலையில் கைத்தெளிப்பான் மற்றும் விசைத் தெளிப்பான்கள் வழங்கப்படுகின்றன. இந்த வாய்ப்பை விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**கரும்புக்கு கூடுதல் விலை உடன் வழங்க வலியுறுத்தல்**

ஈரோடு: கரும்புக்கு அரசு நிர்ணயித்த 2,000 ரூபாய் கொள்முதல் விலையை நடப்பாண்டே வழங்க தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது. தமிழ்நாடு விவசாயிகள் சங்க பத்தாவது மாவட்ட மாநாடு ஈரோட்டில் நடந்தது. தென்னிந்திய நதிகளை இணைக்க வேண்டும். மரபணு மாற்றப்பட்ட விதைகளை தடை செய்ய வேண்டும். விவசாயத்துக்கு எட்டு மணிநேரம் தொடர்ந்து மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும்.

ஒவ்வொரு விவசாயிக்கும் தனித்தனியாக பயிர் இன்சூரன்ஸ் கிடைக்க வேண்டும். இயற்கை வேளாண்மையை ஊக்கப்படுத்த வேண்டும். மத்திய, மாநில அரசுகள் கரும்பு டன் ஒன்றுக்கு 2,500 வழங்க வேண்டும். தமிழக அரசு பட்ஜெட்டில் அறிவித்த ஒரு டன் கரும்புக்கு 2000 ரூபாய் என்பதை நடப்பாண்டிலேயே வழங்க வேண்டும். நெல் குவிண்டால் 1,500 ரூபாய், தேங்காய் கொப்பரை ஒரு கிலோ 60 ரூபாய் வழங்க வேண்டும் என்பன உள்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் துளசிமணி வரவேற்றார். மாநில பொதுச்செயலாளர் துரை மாணிக்கம் தலைமை வகித்தார். கம்யூனிஸ்ட் மாவட்ட செயலாளர் குணசேகரன் முன்னிலை வகித்தார். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் பழனிசாமி உள்பட பலர் கலந்து கொண்டனர். மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி நன்றி கூறினார்.

**மாவுப்பூச்சி தாக்கு பூ உற்பத்தி பாதிப்பு**

கோபிசெட்டிபாளையம்: மாவுப்பூச்சி தாக்குதலால் பூக்களின் உற்பத்தியும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. போதிய மழை இல்லாததால் திருமண சீசனை முன்னிட்டு மல்லிகை உள்பட பல்வேறு பூக்களின் விலையும் கடுமையாக உயர்ந்துள்ளது. கோபி தினசரி மார்கெட்டுக்கு கவுந்தப்பாடி, சத்தி, அத்தாணி, அந்தியூர் மற்று சேலம் பகுதிகளில் இருந்து பல்வேறு வகையான பூக்கள் நாள்தோறும் விற்பனைக்கு வருகிறது.

கடந்த சில மாதங்களாக சரிவர மழை இல்லாததால் பூக்களின் வரத்து குறைந்துள்ளது. தற்போது அதிகளவில் கோவில் திருவிழாக்கள், திருமணங்கள் நடக்கின்றன. இதனால், பூக்களின் விலை உயர்ந்துள்ளது.

கடந்த மாதம் கிலோ 100 ரூபாய்க்கு விற்ற சம்பங்கி தற்போது 180 ரூபாய் வரையிலும், முல்லைப்பூ 250 ரூபாய், கனகாம்பரம் 120 முதல் 170 ரூபாய், செவ்வந்தி 40 முதல் 60 ரூபாய், செண்டு மல்லி 15 முதல் 30 ரூபாய், அரளி 100 முதல் 150 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. மாவுப்பூச்சி தாக்குதலால் அரளிப்பூ வரத்து அதிகளவு குறைந்துள்ளதாக பூ வியாபாரிகள் தெரிவித்தனர்.

**முட்டைக்கோழி விலை உயர்வு என்.இ.சி.சி., சேர்மன் அறிவிப்பு**

நாமக்கல்: 'ஈஸ்டர் பண்டிகையையொட்டி முட்டைக்கோழிக்கான தேவை அதிகரித்துள்ள தால், அதன் விலை கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் உயர்த்தி, 37 ரூபாயாக நிர்ணயிக்கப் பட்டுள்ளது' என, தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு (என்.இ.சி.சி.,) நாமக்கல் மண்டல தலைவர் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

---

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: ஹைதராபாத், சித்தூர், கோதாவரி உள்ளிட்ட பிற இடங்களில் உள்ள முட்டைக்கோழி விலையை அனுசரித்து, முட்டைக்கோழி விலையை கிலோ ஒன்றுக்கு 3 ரூபாய் உயர்த்தி, 37 ரூபாயாக நிர்ணயம் செய்வது என முடிவு செய்யப்பட்டது. அதன்படி பண்ணையாளர்கள் எந்தக் காரணம் கொண்டும் அறிவிக்கப்பட்ட விலையான 37 ரூபாயிலிருந்து மைனஸாக 2 ரூபாய் மட்டுமே குறைத்து கொடுக்க கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

மேலும், 35 ரூபாய்க்கு கீழ் பண்ணையாளர்கள் விற்பனை செய்யவோ, வியாபாரிகள் வாங்கவோ கூடாது என அறிவுறுத்தப்படுகின்றனர். வியாபாரி யாரேனும் அறிவிக்கப்பட்ட விலையில் இருந்து 2 ரூபாய்க்கு மேல் குறைத்துக் கேட்டால் அவருக்கு கோழிகளை விற்க வேண்டாம் என பண்ணையாளர்களை தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கேட்டுக்கொள்கிறது.

முட்டைக்கோழிகளை அறிவிக்கப்பட்ட விற்பனை விலைக்கு விற்க முடியாத பண்ணை யாளர்கள் தங்களுடைய கோழிகளை விற்க பொன்னுசாமி 96007-71888, செல்லப்பன் 94432-30152 அல்லது தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் நாமக்கல் மண்டல அலுவலகம் 221572 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டால், உரிய விலைக்கு விற்பனை செய்ய ஏற்பாடு செய்து கொடுப்பர். கறிக்கோழி விலை 53 ரூபாயாக உயர்ந்துள்ளதாலும், ஈஸ்டர் பண்டிகையையொட்டி முட்டைக்கோழிக்கான தேவை உயர்ந்து வருவதாலும், முட்டைக்கோழி விலை மேலும் உயர வாய்ப்புள்ளது.

முட்டைக்கோழி விற்பனையை ஒழுங்குபடுத்தும் முகமாக எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு பண்ணையாளர்கள் உரிய ஒத்துழைப்பு கொடுத்து நல்ல விலைக்கு தங்களுடைய வயது முதிர்ந்த முட்டை கோழிகளை விற்பனை செய்து பயன்பெற வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தோட்டக்கலை சாகுபடிக்கு 50% மானியம்: புதுக்கோட்டை உதவி இயக்குனர் தகவல்**

புதுக்கோட்டை: புதுக்கோட்டை மாவட்டத்தில் தோட்டக்கலைப் பயிர் சாகுபடிக்கு தேவையான பழமரக் கன்றுகள், காய்கறி விதைகள் மற்றும் மண்புழு உரம், ரசாயன உரம் போன்றவற்றை 50 சதவீத மானிய விலையில் வழங்க தோட்டக்கலைத் துறை தயாராக உள்ளது. இதுகுறித்து தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பாலசுப்பிரமணியன் வெளியிட்ட அறிக்கை: புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகளின் ஒட்டுமொத்த முன்னேற்றத்துக்காக உலக வங்கி நிதி உதவியுடன் நீர்வள, நிலவளத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் தோட்டக்கலைப் பயிர் சாகுபடியை அதிகரிப்பதற்கான நடவடிக்கை முடுக்கிவிடப்பட்டுள்ளது.

திசு வாழை, சவுக்கு, மா, நெல்லி, பலா, சப்போட்டா, கொய்யா, எலுமிச்சை ஆகிய பழமரங்களின் வீரிய ஒட்டு மரக்கன்றுகள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. காய்கறிகளை பொறுத்தமட்டில் வெண்டை, கத்திரி, பூசணி, பறங்கி ஆகியவற்றின் வீரிய ஒட்டு விதைகள் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படும். இதுபோன்று பயிர் சாகுபடிக்கு தேவையான மண்புழு உரம், ரசாயன உரம், பயிர் பாதுகாப்பு மருந்து, இடுபொருள் போன்றவையும் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படும். தோட்டக்கலைப் பயிர் சாகுபடிக்கான நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு செய்முறை பயிற்சிகளும் வழங்கப்பட உள்ளது. எனவே, தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் மாவட்ட தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் அலுவலகத்தை நேரில் தொடர்புகொள்ளலாம். இவ்வாறு அவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

**பால் கொள்முதலுக்கான விலையைஉயர்த்த கோரி 26ம்தேதி ஆர்ப்பாட்டம்:உற்பத்தியாளர் சங்கம் முடிவு**

தஞ்சாவூர்:பால் கொள்முதல் விலையை பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூபாய் 5ம், எருமை பாலுக்கு லிட்டருக்கு ரூபாய் 8ம் விலை உயர்த்தி அரசு வழங்க வேண்டும் என்று பால் உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத் துள்ளனர்.தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க மாவட்ட நிர்வாகக்குழு கூட்டம் தஞ்சையில் நடந்தது. மாவட்டத் தலைவர் காசிநாதன் தலைமை வகித்தார். மாநிலத் தலைவர் முகமதுஅலி வரவேற்றார்.தீர்மானங்கள்: இந்த ஆண்டு கால்நடை தீவன விலையும், கறவை மாடுகளின் விலையும் உயர்ந்துள்ளது. எனவே தமிழக அரசு பால் கொள்முதல் விலையை பசும்பாலுக்கு லிட்டருக்கு ரூபாய் 5ம், எருமை பாலுக்கு லிட்டருக்கு ரூபாய் 8ம் விலை உயர்த்தி வழங்க வேண்டும்.

தற்போது செயல்படும் பல கூட்டுறவு சங்கங்கள் நசிந்து மூழ்கிடும் நிலையில் உள்ளது. இந்நிலையில் மற்ற துறைகளுக்கு மான்யம் வழங்குவது போல் கூட்டுறவு சங்கங்களின் கொள்முதல் பாலுக்கு லிட்டருக்கு ரூபாய் 2 மானியம் வழங்க வேண்டும்.அண்ணாதுரை நூற்றாண்டு விழா மகளிர் பால் பெருக்குத் திட்டத்தின் கீழ் தஞ்சை பால் கூட்டுறவு ஒன்றியம் மூலம் 25 ஆரம்ப சங்கங்களுக்கு அமல்படுத்த அரசு அறிவித்த திட்டம் முறையாக செயல்படுத்தப்படவில்லை.பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பணியாளர்களின் கோரிக்கைகளை முன் வைத்து தஞ்சை பால் கூட்டுறவு ஒன்றிய அலுவலகம் முன்பு வரும் 26ம்தேதி ஆர்ப்பாட்டம் நடத்துவது என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கவுரவத் தலைவர் சாமிநடராஜன், செயலாளர் துரைராஜ், ரத்தினம், துரைச்சாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகளுக்கு விதைகள் வழங்கும் விழா**

தேனி: காமாட்சிபுரம் சென்டெக்ட் வேளாண் அறிவியல் மையத்தின் மூலம் புதிய ரக உளுந்து மற்றும் பாசிப்பயறு விதைகள் விவசாயிகளுக்கு வழங்கும் விழா நடந்தது.மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் மாரிமுத்து தலைமை வகித்தார். பண்ணை மேலாளர் ராஜா வரவேற்றார். அம்மாபட்டி, எல்லபட்டி, கருங்கட் டாண் குளம், சின்னமனூர் கிராமங்களை சேர்ந்த 40 விவசாயிகளுக்கு விதைகள் வழங்கப்பட்டது. இந்த பயிர்கள் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து,மைய தொழில்நுட்ப வல்லுனர்கள் லார்டுசவரிராஜ், ராஜமாணிக்கம் பயிற்சி அளித்தனர். திட்ட உதவியாளர் சுருளி ஆண்டவர் நன்றி கூறினார்.

**வருஷநாடு மலைகிராமங்களில் கொட்டை முந்திரி விளைச்சல் பாதிப்பு : இடைத்தரகர்கள் தலையீட்டால் விவசாயிகள் அவதி**

தேனி: வருஷநாடு-கடமலைக்குண்டு மலைப் பகுதியில் மழை குறைந்ததால், தலைதூக்கிய வறட்சியில் கொட்டை முந்திரி மரங்கள் கருகி வருகின்றன. 420க்கும் மேற்பட்ட கிராமங்களில் முந்திரி பருப்பு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. மென்பாறைகள் நிறைந்த வருஷநாடு- கடமலைக்குண்டு பகுதியிலுள்ள மேற்கு தொடர்ச்சி மலை மற்றும் சிறிய குன்றுகளில் நூறு ஆண்டுகளுக்கு முன்பு குடியேறிய மக்கள், புதர்களை அகற்றி கொட்டை முந்திரி, இலவம் பஞ்சு விவசாயம் செய்தனர்.

வருஷநாடு, கடமலைக்குண்டு, வாலிப்பாறை, ஓயாம்பாறை, அரசரடி, காந்திகிராமம், அஞ்சறை புளி, வெள்ளிமலை, நொச்சிஓடை, வலசை தொழு, மயிலாடும்பாறை, குமணன் தொழு, மூலக்கடை, முத்தாம்பாறை, கொண்ணன்படுகை, நரியூத்து, தங்கம்மாள்புரம், தும்மக்குண்டு, வாய்க்கால்பாறை, சிங்கராஜபுரம் சுற்றியுள்ள 420க்கும் மேற்பட்ட மலைக்கிராமங்களில் 20 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் கொட்டை முந்திரி மரங்கள் இருக் கின்றன.கருகிய மரங்கள்: மானாவாரியாக மழை பொழிவை நம்பியுள்ள, இம்மரங்கள் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் பூத்துக்குலுங்கும். மார்ச் முதல் 4 மாதங்கள் வரை பழங்களுடன், முந்திரி கொட்டைகள் அறுவடை நடைபெறும். இந்த ஆண்டு போதிய மழை

இல்லாததால், பல இடங்களில் முந்திரி மரங்களில் இலைகள் கருகி, பூக்கவில்லை. பெரும்பாலான இடங்களில் காய்கள் வரவேண்டிய இக்காலகட்டத்தில், அங் கொன்றும் இங்கொன்றுமாக பூத்துள்ளன. சில இடங்களில் அறுவடை செய்யப்பட்ட முந்திரிக் கொட்டைகளுக்கு போதிய விலை கிடைக்கவில்லை. இது விவசாயகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இடைத்தரகர்கள் அட்டூழியம்: இப்பகுதியில், இடைத்தரகர்கள் தலையீட்டால், விவசாயிகளுக்கு போதிய வருவாய் கிடைப்பதில்லை. வியாபாரிகளை தேனி போன்ற நகரங்களை விட்டு, இப்பகுதிக்கு வரவிடாமல், இவர்கள் தடுத்துவிடுகின்றனர். மலைப்பகுதிக்கு வந்து, இவர்கள் இஷ்டம்போல் விலையை குறைத்து, விவசாயிகளுக்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தி வருகின்றனர். அடிமாட்டு விலைக்கு கொட்டைமுந்திரியை மிரட்டி வாங்கி செல்லும் இவர்கள், வியாபாரிகளிடம் இரண்டு முதல் பல மடங்கு விலை உயர்த்தி விற்பனை செய்து கொள்ள லாபம் சம்பாதிக்கின்றனர்.

பஞ்சம்மாள்(தும்மக்குண்டு): கொட்டை முந்திரி விவசாயத்தை நம்பி பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட விவசாய குடும்பத்தினர் இருக்கிறோம். மழை இல்லாததால், மரங்கள் கருகியுள் ளன. விளைச்சல் பாதிக்குபாதி தான் கிடைக்கும் நிலை இருக்கிறது. கடந்த ஆண்டு ஆரம்பவிலை கிலோவுக்கு ரூ.50 வரை முந்திரி விற்கப்பட் டது. இந்த ஆண்டு விளைச்சல் பாதிக்கப்பட் டுள்ள நிலையில் விலை உயர வாய்ப்புள்ளது. இடைத்தரகர்கள் தலையீடு இல்லாவிட்டால், விவசாயிகளுக்கு ஓரளவு வருவாய் கிடைக்கும். அதிகாரிகள் கவனத்திற்கு: இப்பகுதியில் இடைத்தரகர்களை தடுக்க சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கொட்டை முந்திரிக்கு அரசு மூலம் விலை நிர்ணயம் செய்து, பாதிக்கப் பட்டுள்ள விவசாயிகளுக்கு இந்த ஆண்டு முதல் உரிய விலை கிடைக்க உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**நிலமற்ற விவசாய தொழிலாளர்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்க வேண்டும்:விவசாய தொழிலாளர்கூட்டத்தில் தீர்மானம்**

உடன்குடி:அரசு அறிவித்தபடி நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு இரண்டு ஏக்கர் நிலம் வழங்கிட வேண்டும் என உடன்குடியில் நடந்த விவசாயத் தொழிலாளர் சங்க கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றினர்.அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் உடன்குடி-சாத்தான்குளம் ஒன்றிய பேரவை கூட்டம் உடன்குடியில் நடந்தது. மாவட்ட உதவி தலைவர் முருகன் தலைமை வகித்தார்.

அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க செயலாளர் ஜெயராஜ் துவக்கி வைத்தார். மாவட்ட உதவி தலைவர் பாலசுந்தரகணபதி வரவேற்றார். திருச்செந்தூர் செயலாளர் துரைராஜ், உடன்குடி-சாத்தான்குளம் ஒன்றிய சி.பி.எம் செயலாளர் ஜெயபாண்டியன், தூத்துக்குடி மாவட்ட விவசாயத் தொழிலாளர் சங்க செயலாளர் ரவிச் சந்திரன் ஆகியோர் பேசினர். உடன்குடி-சாத்தான்குளம் ஒன்றிய பேரவை புதிய நிர்வாகிகள் தேர்வு நடந்தது.

தலைவராக முருகனும், உதவி தலைவராக சுடலையும், செயலாளராக கந்தசாமியும், இணை செயலாளராக கொம்பையாவும், பொருளாளராக யோவானும் மற்றும் ஒன்றிய குழு உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர். தமிழக அரசு அறிவித்தபடி நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு 2 ஏக்கர் நிலம் வழங்கிட வேண்டும்,

குடிமனை இல்லாத மக்களுக்கு குடிமனை பட்டா வழங்கிட வேண்டும், திருப்பணி மக்களுக்கு உடனடியாக பாலம் கட்டிட வேண்டும், மெஞ்ஞானபுரம் பகுதியில் பெண்கள், ஆண்களுக்கு என்று தனியாக நவீன கழிப்பிட வசதி செய்ய வேண்டும், செட்டியாபத்து பஞ்., 200 ஆண்டுகளாக கோயில் நிலத்தில் குடியிருந்து வரும் மக்களுக்கு குடிமனை பட்டா வழங்கிட வேண்டும், கோவிந்தம்மாள்புரத்திற்கு சுடுகாடு வசதி அமைத்திட வேண்டும்,

60 வயதான விவசாய தொழிலாளர்களுக்கு பென்ஷன் வழங்கிட வேண்டும், மருதூர்கரை பகுதியில் உள்ள மக்களுக்கு உடனடியாக இலவச வீட்டுமனை பட்டா வழங்கிட வேண்டும் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றினர். முருகன் நன்றி கூறினார்.

**குதிரை எடுப்பு விழா**

கோட்டூர்:கோட்டூர் ஒன்றியம் திருமக்கோட்டை அய்யனார் கோயில் பங்குனித் திருவிழாவை முன்னிட்டு குதிரை எடுப்பு விழா நடந்தது.இளவனூரில் இருந்து மண்ணால் செய்யப்பட்ட குதிரைகளை அலங்கரித்து ஊர்வலமாக எடுத்து வந்து திருமக்கோட்டை அய்யனார் கோயிலில் வைத்தனர். இதை ஒட்டி அய்யனாருக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை நடந்தன.

**உரங்கள் விலை உயர்வால் உற்பத்தி பாதிக்கும்: விவசாய சங்கம் கவலை**

விருதுநகர்: இந்தியா முழுவதும் நேற்று முதல் உரங்களின் விலை உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டு விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படும் என தமிழ்நாடு விவசாயிகள் சங்க செயலாளர் விஜயமுருகன் தெரிவித்தார்.உரவிலை உயர்வு: மத்திய அரசு, உரங்களின் விலைகளை கம்பெனிகளே தீர்மானிக்கலாம். உரத்திற்கான அரசு மானியம் நுண்ணூட்ட சத்து அடிப்படையில் வழங்கப்படும் என அறிவித்துள்ளது. யூரியாவிற்கு மூடைக்கு 50 ரூபாய் உயர்த்தியுள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க செயலாளர் விஜயமுருகன் தெரிவித்திருப்பதாவது: தமிழகம் முழுவதும் பருவ மழை பொய்த்துள்ளது. விவசாயம் கடும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது.இலவச மின்சாரம், உரமானியம் வழங்கப்படுவதாலும் ஆர்வமாக விவசாயம் செய்து வருகின்றனர். தற்போது அரசு, உரங்களின் விலையை அதிகரித்துள்ளது. இது விவசாயிகளை வெகுவாக பாதிக்கும்.உற்பத்தி பாதிப்பு: உரங்கள் தட்டுப்பாடு ஏற்படும் போது விவசாயிகள் பயிர் உற்பத்தி செய்வதற்கு ஆர்வமில்லாத நிலை ஏற்படும். பொருள் உற்பத்தி குறையும். விவசாயிகளுக்கு தேவையான உரங்களை, தனியார் நிறுவனங்களிடமிருந்து விலைக்கு வாங்கி, குறைந்த விலையில் விவசாயிகளுக்கு வினியோகிக்க அரசு முன்வர வேண்டும், என்றார்.

# அடர்ந்த புதர்களால், தண்ணீரும் செல்ல வழியில்லை: வயல்வரப்புகள் போல் காட்சி அளிக்கும் தேவர்சோலை ஆற்று வாய்க்கால்

*கூடலூர், ஏப்.2–*



வயல்வரப்புகள் போல் காட்சி அளிக்கும் தேவர்சோலை ஆற்றுவாய்க்காலை படத்தில் காணலாம்.

புதர்கள் மண்டி கிடப்பதால் மழை காலங்களில் தண்ணீரும் செல்ல வழியில்லாமல் வயல்வரப்புகள் போல் தேவர்சோலை ஆற்றுவாய்க்கால் காணப்படுகின்றன. இதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள் ளது.

வயல்வரப்பு போல் மாறி வரும் தேவர்சோலை ஆறு

கூடலூர் தாலுகா தேவர்சோலை பேரூ ராட்சிக்குட்பட்ட மேபீல்டு பகுதியில் நெலாக்கோட்டை யில் இருந்து தேவர்சோலை வழியாக ஆற்றுவாய்க்கால் செல்கிறது. மழை காலங்களில் இந்த வாய்க்கால் வழியாக வெள்ளம் கரைபுரண்டு ஓடி தேவர்சோலை தேவன் வழியாக ஸ்ரீமதுரையை அடைகிறது.

பின்னர் முதுமலை வழியாக மாயார் ஆற்றில் கலக்கிறது. தற்போது நெலாக்கோட்டை– தேவர்சோலை வாய்க்கால் புதர்கள் மண்டி காடுகள் போல் காட்சி அளிக்கிறது. இதனால் நாளுக்குநாள் வயல்வரப்புகள் போல் மாறி வருகிறது. தற்போது கோடை காலமாக உள்ளதால் வாய்க்காலில் நீர்வரத்து குறை வாக உள்ளது. இனி வரும் மாதங்கள் மழை கால மாக இருப்பதால் வாய்க்காலில் நீர் வரத்து அதிகரிக்கும்.

அகலப்படுத்த கோரிக்கை

இந்த சமயத்தில் வாய்க்கால் தூர்வாரப்படாமல் உள்ளதால் மழைநீர் விவசாய நிலங்களுக்கும், பொதுமக்கள் குடியிருப்புகளுக்குள் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. வாய்க்காலை முறையாக தூர்வாரி அகலப்படுத்தினால் மழை வெள்ளம் சீராக செல்ல வழி பிறக்கும். இதனால் சம்பந்தப்பட்ட துறையினர் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த பகுதி மக்கள், விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### சமவெளி பகுதிகளில் விளைவிக்கப்படும்

# மகாராணி முட்டைகோஸ் பயிரிடுவதில் கூடலூர் விவசாயிகள் அதிக ஆர்வம்

கூடலூர், ஏப்.2–

சமவெளி பிரதேசங்களில் விளையும் மகாராணி ரக முட்டை கோஸ் பயிரிடுவதில் கூடலூர் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வரு கின்றனர்.

**சமவெளி காய்கறிகள் விளையும் கூடலூர்**

நீலகிரி மாவட்டம் மலை பிரதேசமாக விளங்கி வருவ தால் மலைப்பயிர்களான கேரட், உருளைக்கிழங்கு, பீட் ரூட், முள்ளங்கி, காலி பிளவர், மேரக்காய், பட்டாணி, பீன்ஸ் உள்ளிட்ட காய் கறிகளும், பணப்பயிர்களான கிராம்பு, இஞ்சி, ஏலக்காய், காபி, தேயிலை ஆகியவை அதிகளவு விளைவிக்கப்படுகின்றன.

கூடலூர், பந்தலூர் தாலுகாவில் மலை பிரதேச காய்கறிகளுடன், சமவெளி பிரதேசத்தில் விளையக்கூடிய காய்கறிகளும் பயிரிடுவதில் விவசாயிகள் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். குறிப் பாக தேயிலை விவசாயத்தை நம்பி வாழ்ந்து வந்த விவசாயி கள் விலை வீழ்ச்சியால் சமவெளி காய்கறிகளும் பயிரிடுவதில் நாட்டம் காண தொடங்கினர்.

கூடலூர் பகுதி விவசாயிகள் பாகற்காய், புடலங்காய், மிளகாய், பஜ்ஜி மிளகாய், வெண்டைக்காய், கத்தரிக்காய் உள்ளிட்ட சமவெளி காய்கறி கள் அதிகளவு பயிரிட்டு அறு வடை செய்து வருகின்றனர். தற்போது பாகற்காய், கத்தரிக்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது. இந்த நிலையில் சமவெளி பகுதியில் விளையக்கூடிய மகாராணி என அழைக்கக் கூடிய முட்டை கோஸ் பயிரை கூடலூர் பகுதி விவசாயிகள் அதிகளவு பயிரிட்டுள்ளனர். மகாராணி முட்டை கோஸ் 3 மாதத்தில் அறுவடை செய்யக் கூடிய பயிராகும். ரசாயன உரங்களை தவிர்த்து இயற்கை உரங்களை அதிகளவு கூடலூர் பகுதி விவசாயிகள் பயன் படுத்தி வருகின்றனர். இத னால் விளைச்சலும் அதிகரித் துள்ளதாக கூடலூர் கம்மாத்தி விவசாயி ஹாசன் கூறினார்.

**அதிக ஆர்வம்**

இது குறித்து கூடலூர் தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் தருமலிங்கத்திடம் கேட்ட போது, குயிசர், மகாராணி என 2 வகை உள் ளது. இதில் குயிசர் முட்டை கோஸ் 100 நாட் களில் அறுவடை செய்யக்கூடிய பயிராகும். இதற்கு அடுத்த படியாக மகாராணி முட்டை கோஸ் சமவெளி பகுதியில் விளையக்கூடியது. கூடலூர் பகுதியில் இந்த ரகத்தை பயிரிடுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று கூறினார்.

குறிப்பிட்ட பயிர்களை மட்டும் நம்பி இருக்கா மல் தங்களது பொருளாதாரத்தை உயர்த்தி கொள்வதற்காக கூட லூர் விவசாயிகள் பல்வேறு ரக காய்கறிகளை பயிரிடுவதில் முன்னணி வகிக்கின்றனர் என்பது மட்டும் உண்மை.



கூடலூர் கம்மாத்தி பகுதியில் பயிரிட்டுள்ள மகாராணி ரக முட்டைக்கோஸ் செடிகளை படத்தில் காணலாம்.



காலில் காயம் அடைந்த குட்டி யானையை கும்கி யானை உதவியுடன் வனத்துறையினர் பிடித்த காட்சி.



காலில் காயத்துடன் குட்டியானை.

## மேட்டுப்பாளையம் வனப்பகுதியில்

# காலில் காயத்துடன் திரிந்த குட்டியானை பரிதாப சாவு

மேட்டுப்பாளையம்,ஏப்.2-

மேட்டுப்பாளையம் வனப்பகுதியில் காலில் காயத்துடன் அவதிப்பட்ட குட்டி யானையை மயக்க ஊசி போட்டு வனத்துறையினர் பிடித்தனர். வனத்துறையினர் தீவிர சிகிச்சை அளித்தும் பலனின்றி அந்த குட்டி யானை பரிதாபமாக இறந்தது.

### குட்டி யானை அவதி

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் வனச்சரகத்துக்குட்பட்ட ஓடந்துறை, காப்புக்காடு, ஜக்கனாரி பகுதிகளில் கடந்த சில நாட்களுக்கு முன்பு வனத்துறையினர் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது சுமார் 6-ல் இருந்து 7 வயது மதிக்கத்தக்க குட்டி காட்டு யானை ஒன்று முன் இடது கால் வீங்கி காயத்துடன் நடக்கமுடியாமல் அங்கும், இங்கும் அலைந்து அவதிப்பட்டுக் கொண்டிருந்தது.

இதைப்பார்த்த வனத்துறையினர் அந்த குட்டி யானை அருகே சென்றனர். ஆனால் அந்த யானை ஆவேசத்துடன் அவர்கள் யாரையும் தனது அருகே நெருங்க விடவில்லை. இதுபற்றி மேட்டுப்பாளையம் வனச்சரக அலுவலர் தன்னப்பனுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அவர் உடனடியாக வனத்துறை உயர் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தினார். அவர்களது உத்தரவின் பேரில், அரசு வன கால்நடை மருத்துவ அலுவலர் டாக்டர் மனோகரன், வனவர் நசீர் மற்றும் வனத்துறையினர் வனப்பகுதியில் காலில் காயத்துடன் அவதிப்பட்டு வந்த குட்டி யானையை தீவிரமாக தேடினர்.

### கும்கி யானைகள்

இதற்கிடையில் காலில் காயத்துடன் அவதிப்படும் அந்த குட்டி யானைக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க வனத்துறையினர் முடிவு செய்தனர். உடனே டாப்சிலிப்பில் இருந்து 52 வயதுள்ள நஞ்சன், 26 வயதுள்ள பரணி ஆகிய 2 கும்கி யானைகள் மேட்டுப்பாளையம் கொண்டு வரப்பட்டன.

வனத்துறையினர் தீவிரமாக கண்காணித்ததில் நேற்று முன்தினம்(31-ந்தேதி) மாலை 5 மணிக்கு பிளாக்தண்டர் பூங்காவை அடுத்துள்ள வனப்பகுதியில் உள்ள செயற்கை குட்டைக்கு நடக்க முடியாமல் தள்ளாடிய படி குட்டி யானை தண்ணீர் குடிக்க வந்தது தெரியவந்தது. இதைக்கண்ட வனத்துறையினர் குட்டி யானையின் முன்பு தென்னை ஓலைகள், சவுரி ஆகிய வற்றைப் போட்டனர். மேலும் வாழைப்பழத்தில் மருந்து, மாத்திரைகளை வைத்து அந்த யானை நடமாடும் பகுதியில் வைத்தனர்.

### குட்டி யானை சிக்கியது

இதற்கிடையில் நேற்று காலை ஓடந்துறை காப்புக்காடு வனப்பகுதியில், பொருசுக்காட்டில் உள்ள தண்ணீர் வற்றிய குட்டையில் குட்டி யானை நின்றுக்கொண்டிருந்தது. உடனே கோவை மண்டல வனப்பாதுகாவலர் கண்ணன், மாவட்ட வன அலுவலர் ஐ.அன்வர்தீன், அரசு வன கால்நடை மருத்துவ அலுவலர் டாக்டர் மனோகரன், வனச்சரக அலுவலர் தன்னப்பன், வனவர் நசீர் மற்றும் வனக்காப்பாளர்கள், வனக்காவலர்கள், வேட்டை தடுப்புக்காவலர்கள் ஆகியோர் 2 கும்கி யானைகளுடன் பொருசுக்காடு குட்டைக்கு சென்றார்கள்.

நஞ்சன் என்ற கும்கி யானை, குட்டி யானையின் அருகே கொண்டு செல்லப்பட்டது. கும்கி யானையை கண்டதும் குட்டி யானை ஆவேசத்துடன் ஓடி வந்தது. அருகே வந்ததும் அந்த யானை மந்திரத்தில் கட்டுண்டது போல நின்றுக்கொண்டது. தொடர்ந்து குட்டி யானை வனப்பகுதிக்குள் சென்று விடாதவாறு நஞ்சன் கும்கி யானை குறுக்கே நின்று கொண்டது. மற்றொரு கும்கி யானை பரணி பாதுகாப்புக்காக நிறுத்தி வைக்கப்பட்டது.

### பரிதாப சாவு

உடனே யானை பாகன்கள் பிரசாத், ராமன் ஆகியோர் மற்ற பாகன்களின் உதவியோடு, அந்த குட்டி யானையின் கழுத்தில் கயிற்றால் சுருக்குப் போட்டு இழுத்து மரத்தில் கட்டி வைத்தனர். அதன்பின்னர் வனத்துறையினர் குட்டி யானையை நிறைய தண்ணீர் குடிக்க வைத்தனர்.

இதைத்தொடர்ந்து மண்டல வனப்பாதுகாவலர் கண்ணன், மாவட்ட வன அலுவலர் ஐ.அன்வர்தீன் ஆகியோர் மேற்பார்வையில் டாக்டர் மனோகரன், குட்டி யானைக்கு துப்பாக்கி மூலம் மயக்க ஊசியை செலுத்தினார். இதன்பிறகு மயங்கிய நிலையில் இருந்த யானைக்கு டாக்டர் மனோகரன் தீவிர சிகிச்சை அளித்தார். யானையின் காலில் ஒரு சுருக்கு இரும்பு கம்பி குத்தி இருந்தது. அந்த பகுதி சீழ் வைத்து புழுக்கள் நெளிந்து கொண்டிருந்தன.

எனவே டாக்டர்கள் காலில் சீழ் பிடித்த பகுதியை அகற்றினர். மாலை 6 மணி அளவில் மயக்கம் தெளிந்த அந்த யானை தள்ளாடிய படி கீழே விழுந்தது. சிறிது நேரத்தில் குட்டி யானை பரிதாபமாக இறந்தது. இதனால் வனத்துறையினர் பெரும் சோகத்தில் உள்ளனர்.



பல்லடம் வெங்கிடாபுரத்தில் உள்ள ஒரு கோழிப்பண்ணையில் குவியல், குவியலாக கறிக்கோழிகள் செத்து கிடப்பதை படத்தில் காணலாம்.



கோழிப்பண்ணையில் செத்த கறிக்கோழிகளை மூட்டையாக கட்டி வைத்திருப்பதையும்,குவியலாககோழி கீழே கிடப்பதையும் படத்தில் காணலாம்.

## பல்லடம் கோழிப்பண்ணையில் நோய் தாக்குதல்:

# ரூ.10 லட்சம் மதிப்புள்ள 7 ஆயிரம் கோழிகள் சாவு

பல்லடம், ஏப்.2-

திருப்பூர் மாவட்டம் பல்லடம், பொங்கலூர், சுல்தான்பேட்டை மற்றும் சுற்றுப்பகுதிகளில் பிரதான தொழிலாக கறிக்கோழி உற்பத்தி மற்றும் கோழிமுட்டை உற்பத்தி நடைபெற்று வருகிறது. சுமார் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இந்த கோழிப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப் படும் பல்லாயிரக்கணக்கான கறிக்கோழிகள் மற்றும் முட்டைகள் தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்பட பல்வேறு மாநிலங்களுக்கு தினமும் 100-க்கணக்கான வாகனங்களில் அனுப்பப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

பல்லடம் அருகே உள்ள வெங்கிடாபுரத்தில் ஆயிமுத்து என்பவருக்கு சொந்தமான கோழிப்பண்ணை உள்ளது. 7 அடி உயரம், 40 அடி அகலம் மற்றும் 270 அடி நீளத்தில் 2 செட்டுகள் அமைக்கப்பட்டு, அந்த செட்டுகள் 5 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு சுமார் 25 ஆயிரம் முட்டைக் கோழி வளர்க் கப்பட்டு வருகிறது. தினசரி முட்டைக் கோழிகள் போடும் பல்லாயிரக்கணக்கான முட்டைகள் விற்பனைக்காக தமிழ்நாடு மற்றும் வெளிமாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுகிறது. முட்டை போடும் காலம் முடிந்த பிறகு இந்த கோழிகள் இறைச்சிக்காக விற்பனை செய்யப் படுகிறது.

இந்த நிலையில் ஆயிமுத்துக்கு சொந்தமான கோழிப்பண்ணைகளில் வளர்க்கப்பட்டு வந்த தாய்கோழிகள் கடந்த ஒரு வாரமாக கொஞ்சம் கொஞ் சமாக செத்து விழுந்தன. கடந்த ஒரு வாரத்தில் மட்டும் ரூ.10 லட்சம் மதிப்புள்ள சுமார் 7 ஆயிரம் கோழிகள் செத்ததாக கூறப்படுகிறது. ஆனால் கோழிகளின் சாவுக்கு சரியான காரணம் தெரியவில்லை.

இதுகுறித்து கோழிப்பண்ணை உரிமையாளர் ஆயிமுத்துவிடம் கேட்ட போது அவர் கூறியதாவது:-

நான் 30 வருடங்களாக கோழிப்பண்ணை தொழில் செய்து வருகிறேன். பண்ணையில் வளர்க்கப்பட்டு வந்த கோழிகள் கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து செத்து வந்தது. 22 வாரம் வளர்க்கப்பட்டு வந்த 4 ஆயிரம் கோழிகளும், 40 வாரமாக வளர்த்து வந்த ஆயிரம் கோழிகளும், 60 வாரம் வளர்த்து வந்த 2 ஆயிரம் கோழிகளும் இறந்து விட்டன. இதன் மதிப்பு ரூ.10 லட்சம் ஆகும்.

முதலில் கடந்த 25-ந் தேதியன்று நூற்றுக்கணக்கான கோழிகள் செத்ததை பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். கோடை வெயில் தாங்காமல் கோழிகள் செத்து விட்டது என்று நினைத்தேன். இதைத்தொடர்ந்து பல்லடத்தில் உள்ள கோழி பரிசோதனை கூடத்துக்கு சில கோழிகளை கொண்டு சென்றேன். அங்கு பரிசோதனை செய்யப்பட்டது. அவர்கள் கொடுக்க சொன்ன மருந்தை கோழிகளுக்கு கொடுத்தேன். ஆனாலும் கோழிகள் தொடர்ந்து செத்து வந்தது. நோய் குறித்து கேட்ட போது, கோடை வெயில் தாங்காமல் ராணிக்கட்டு நோய் வந்திருக்கலாம் என்றும் அதனால் தான் கோழிகளுக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு பலியாகி வருகிறது என்றும் தெரிவித் தனர்.

மீண்டும் 29-ந் தேதி நாமக்கல் கால்நடை மருத்துவ துறையின் பரிந்துரையின் பேரில் கோழிகளுக்கு மருந்து கொடுத்தோம். அப்படியும் கோழிகள் செத்தது. பின்னர் திருப்பூர் கால்நடை பராமரிப்பு துறை அதிகாரிகள் பண்ணைக்கு வந்து ஆய்வு செய்து கோவைக்கு தெரிவித்தனர். கோவையில் இருந்து மருத்துவ குழுவினர் இன்று (நேற்று) வந்து கோழி இறைச்சி மற்றும் ரத்தத்தை ஆய்வுக்கு எடுத்தனர். புனேயில் உள்ள பரிசோதனை கூடத்துக்கு அனுப்பி நோய் குறித்து ஆய்வு நடத்தப்படும் என்று கூறினார்கள். ஆனால் பண்ணையில் உள்ள கோழிகள் தொடர்ந்து செத்து வருகிறது. கோழிகளை காப்பாற்ற என்ன செய்ய வேண்டும் என்று தெரியவில்லை.

இவ்வாறு ஆயிமுத்து கூறினார்.

ஆயிமுத்து கோழிப்பண்ணையில் ஆயிரக்கணக்கான கோழிகள் தொடர்ந்து செத்து வரும் தகவல் கிடைத்ததும் அந்த சுற்றுப்பகுதிகளில் உள்ள கோழிப்பண்ணையாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.